**இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,**

**திருப்பூர்.**

**அ.வ.எண்.** : **193/2021**

**வா சா.** **2**

**பெயர்** : சகுந்தலா

-------------------------------------------------------------

**நாள்: 14.07.2025**

**சாட்சியம் பதிவு செய்யப்பட்ட நேரம்: 11.40 am to 11.53 am**

**குறுக்குவிசாரணை**

இந்த வழக்கில் எனக்கு சாட்சியம் அளிக்க அழைப்பாணை வரவில்லை. ஒரு மாதத்திற்கு முன்பு சாட்சியம் அளிக்க என்னை கார்த்திகா அழைத்தார். அவர் என் வீட்டிற்கு அருகிலேயே இருக்கிறார். எவ்வாறு சாட்சியம் அளிக்க வேண்டும் என்று எனக்கு சொல்லி கொடுத்தாரா என்றால் இல்லை. கார்த்திகாவின் அம்மா பெயர் சத்தியவதி. சத்தியவதிக்கு உடன்பிறந்த ஒரு சகோதரி மகேஷ்வரி என்பவர் உள்ளார். சத்தியவதி மற்றும் மகேஷ்வரிக்கு சொந்த ஊர் திருப்பூர் ஆகும்.சத்தியவதியை எனக்கு 40-45 வருடங்களாக தெரியும். சத்தியவதிக்கும் ராமசாமிக்கும் திருமணம் நடந்தது. நான் திருமணத்திற்கு போயிருந்தேன். சத்தியவதியின் தந்தை என்ன வேலை செய்தார் என்றால் அவர் வீட்டில் தான் இருந்தார். சத்தியவதியின் தந்தை பெரிய வசதி இல்லாமல் சாதாரண வாழ்க்கை தான் வாழ்ந்தார் என்றால் சரிதான். சத்தியவதி மற்றும் ராமசாமி திருமணத்திற்கு பிறகு சத்தியவதி

<u>14 .07.2025 – அ.வ.எண்.193/ 2021 – வா.சா. 2 சகுந்தலா</u>

ராமசாமியின் வீட்டில் எத்தனை நாட்கள் வாழ்ந்தார் என்றால் ஒன்றரை வருடம் ஒன்றாக வாழ்ந்தார்கள் அதற்கு பிறகு செல்லவில்லை. இருவருக்கும் விவாகாரத்து ஆகிவிட்டது. விவாகாரத்து ஆன சமயத்தில் சத்தியவதிக்கு ராமசாமி எவ்வளவு தொகை கொடுத்தார் என்றால் 4 அல்லது 5 லட்சம் கொடுத்தாக சொன்னார். ராமசாமி சத்தியவதிக்கு 40 பவுன் வாங்கி வைத்தவிவரம் தெரியுமா என்றால் அவர் வாங்கி வைக்கவில்லை. இன்றைய தினம் சத்தியவதி நீதிமன்றத்திற்கு வந்துள்ளாரா என்றால் வந்துள்ளார். வழக்கு சொத்தின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் ஒரு ஏக்கர் இருப்பதாக சொன்னார்கள் ஆனால் எந்த இடத்தில் இருக்கிறது என்று எனக்கு தெரியாது.

பிரமாண வாக்குமூலத்தில் கூறிய உள்ள விவரங்கள் சத்தியவதி சொல்லி தான் தெரியும் என்றால் வாதி கார்த்திகா சொல்லி தான் தெரியும். ராமசாமியின் உடன்பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் ஒரு சகோதரர், ஒரு சகோதரி உள்ளார். வழக்கு சொத்து பற்றி எந்த விவரமும் எனக்கு தெரியாதுஎ ன்றும் வாதி அருகில் இருப்பதால் ஒரு வாரமாக சொல்லிகொடுத்து நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி தாக்கல் செய்துள்ள

**14 .07.2025 – அ.வ.எண்.193/ 2021 – வா.சா. 2 சகுந்தலா**

ஆவணங்களை படித்து பார்த்துள்ளேனா என்றால் படித்து பார்த்தேன் என்ன ஆவணம் என்று எனக்கு தெரியாது. எனக்கு தனிப்பட்ட முறையில் வாதிகளை பற்றியோ சொத்துகளை பற்றியோ எனக்கு தெரியாது என்றால் சரியல்ல.

Typed to my dictation as deposed by the witness in Open Court and acknowledged by him / her to be correct.

SRIDHAR CHINNASAMY

Digitally signed by SRIDHAR CHINNASAMY
Date: 2025.07.14 15:18:12 +0530

II Additional District and
Sessions Judge,
Tiruppur.